" குறளகம் "
தொலைபேசி: 25340761

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**

**குறளகம், சென்னை – 600 104.**

**E-mail: tnkvibchennai2022@gmail.com**

*****

## I. ஒப்பந்ததாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்

1. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான குறளக கட்டிட தரைத்தள பிரதான கதரங்காடி உட்புறம் மையப்பகுதியில் 3500 சதுரடியில் **சைவ உணவகம்** நடத்துவதற்கு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை அனைத்து பணி நாட்களிலும் 13.05.2022 வரை காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை ரூ.100/– செலுத்தி (திரும்ப வழங்க இயலாது) அல்லது தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் என்ற பெயரில் வங்கி வரைவோலையாக அளித்து மேற்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை www.tenders.tn.gov.in என்ற இணைய தளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

3. ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய படிவம் "A" மற்றும் வாடகை தொகை தொடர்பான விவரங்கள் அடங்கிய படிவம் "B" என்றவாறு தனித்தனி உறைகளில் உறையிட்டு அதனை பிரதான உறையில் உறையிட்டு தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், குறளகம், சென்னை – 104 என்ற முகவரியிட்டு மூடிமுத்திரையிடப்பட்ட வகையில் வாரியத்திற்கு சமர்ப்பித்திட வேண்டும்.

4. முன் வைப்பு தொகை ரூ.50,000/–

PTO

## II. தொழில் நுட்ப உறை "A" –வில் இணைத்து சமர்ப்பிக்க வேண்டியவை.

1. முன் வைப்புத் தொகை ரூ.50,000/– வங்கி வரைவோலையாகவோ / காசோலையாகவோ முதுநிலை கணக்கு அலுவலர் (கணக்கு), தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் என்ற பெயரில் வாரியத்திற்கு செலுத்த வேண்டும். (திருப்பி தர தக்கது)

2. சைவ உணவகம் நடத்தியதற்கான அனுபவம் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் இருக்க வேண்டும். கடந்த மூன்று வருடங்களில், வருடத்திற்கு குறைந்த பட்சம் ரூ.50.00 இலட்சத்திற்கு வியாபாரம் (Annual Turnover) செய்திருக்க வேண்டும். மேலும், அதற்கான சான்றுகள் இணைக்க வேண்டும்.

3. வருமான வரி எண் **(Pan No)** மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு வருமான வரி செலுத்தியுள்ளதற்கான சான்று நகல் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. சரக்கு மற்றும் சேவை கட்டண பதிவு எண் **(GST No)** மற்றும் இறுதியாக சரக்கு மற்றும் சேவை கட்டணம் செலுத்தியுள்ளதற்கான படிவம் நகல் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

5. சைவ உணவகம் நடத்துவதற்கு இசைவு தெரிவிக்கும் நபர் / நிறுவன உரிமையாளர் தங்களுடைய ஆதார் எண் மற்றும் ஆதார் அட்டை நகல் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

6. சைவ உணவகம் நடத்துவதற்கு இசைவு தெரிவிக்கும் நபர் / நிறுவனம் உணவகத்தில் பணியாற்றக்கூடிய மனித / இயந்திர ஆற்றல் (Man / Machine Power) தொடர்பான விவரங்களை குறிப்பிட வேண்டும்.

<u>**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**</u>
<u>**குறளகம், சென்னை – 104**</u>

# (Price Bid “B”)

<u>தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான குறளக கட்டிட தரைத்தள பிரதான கதரங்காடி உட்புறம் மையப்பகுதியில் **3500 சதுரடியில் சைவ உணவகம் நடத்துவதற்கு உரிய ஒப்பந்தப்புள்ளி**</u>

| **வ.எண்** | **உணவக எண் மற்றும் சதுரடி** | **ஒரு மாதத்திற்கான ஒரு சதுரடி வாடகை ரூ.** |
|---|---|---|
| 1. | KK OTS<br>3500 சதுரடி | |

**குறிப்பு** – குறிப்பிடப்படும் வாடகைத் தொகையுடன் 18% GST செலுத்த வேண்டும்.

**ஒப்பந்ததாரர் கையொப்பம்**

PTO

# நிபந்தனைகள் விவரம்

| | |
|---|---|
| 1 | சைவ உணவகம் ஒரு சதுரடிக்கான மாத வாடகை + 18% GST சேர்த்து ஒரு மாதத்திற்கான மொத்த மாத வாடகை தொகையை குறிப்பிட வேண்டும். |
| 2 | சைவ உணவகத்திற்காக உபயோகப்படுத்தும் தண்ணீர் மற்றும் மின் கட்டணம் பயனீட்டிற்கு ஏற்றவாறு வாரியத்திற்கு செலுத்திட வேண்டும். |
| 3 | ஒரு மாத வாடகையின் 12 மடங்கினை முன்பணமாக செலுத்த வேண்டும். |
| 4 | முன்பணம் செலுத்தி, சைவ உணவகம் ஒதுக்கீட்டிற்கான உத்தரவை பெற்றுக்கொண்ட 15 தினங்களுக்குள் வாடகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் . |
| 5 | வாரியத்திலிருந்து சைவ உணவகம் நடத்துவதற்கான அனுமதி மற்றும் ஒப்பந்தம் பெற்ற பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதார துறை மற்றும் தமிழக உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் **உரிமம் பெற்று உணவகம் நடத்திட வேண்டும்.** |
| 6 | வாடகைதாரர் உணவகத்தை எந்த நோக்கத்திற்கு வாடகைக்கு எடுத்தாரோ அதை தவிர வேறு எந்த விதமான உபயோகத்திற்கும் பயன்படுத்தக் கூடாது. |
| 7 | வாடகை ஒப்பந்ததாரர் / நிறுவனம் மேற்படி உணவகத்தை வேறு யாருக்கும் மேல் / உள் வாடகைக்கோ விடக்கூடாது. மீறும் பட்சத்தில் உடனடியாக முன் அறிவிப்பின்றி உணவகத்தை காலி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 8 | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னை அவர் சார்ந்த அலுவலர்கள் மற்றும் தொடர்பான வாரிய பணியாளர்கள் எந்த நேரத்திலும் எந்த காரணத்திற்காகவும் வாடகைக்கு விடப்பட்ட உணவகத்தை தணிக்கை செய்ய உரிமை உண்டு. |
| 9 | வாடகை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள இடத்தினை மட்டுமே பயன்படுத்த வேண்டும். கூடுதல் இடத்தினை பயன்படுத்தவோ, ஆக்கிரமிக்கவோ கூடாது. |
| 10 | வாடகை ஒப்பந்ததாரர் வாரிய அனுமதியின்றி உணவக கட்டிட அமைப்பில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளக் கூடாது. உணவக உட்புறம் உள் அலங்காரம் (Interior Work) செய்ய விரும்பினால் வாரியத்திடமிருந்து எழுத்து மூலமாக அனுமதி பெற்ற பின்னரே பணிகளை மேற்கொள்ள வேண்டும். |
| 11 | பெயர் பலகை மற்றும் இதர விளம்பர பலகைகள் அனைத்தும் வாரியத்திடமிருந்து அனுமதி பெற்று வாரியம் ஒதுக்கீடு செய்யும் இடத்தில் மட்டுமே வைக்கப்பட வேண்டும். |
| 12 | கட்டிடத்தில் எதிர்பாராத வகையில் ஏற்படும் பழுதுகள் சரிபார்த்தல் குறித்து வாரிய அளவில் முடிவு செய்து மேற்கொள்ளப்படும். |
| 13 | தற்போதும், எதிர்காலத்திலும் வாரிய உத்தரவுகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். |

மேற்காணும் நிபந்தனைகள் அனைத்தும் நான் / நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்.